S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் ஜனவரி 08 * 2026 * மலர் -1 * இதழ்-221* VOL-1 * ISSUE-221 விலை ரூ.3 * பக்கம் -4

## திண்டுக்கல்லில் நடந்த அரசு விழாவில்

# ரூ.1,595 கோடியில் முடிவுற்ற பணிகள்!

## ★ ரூ.1,000 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்; முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!!






சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற விழாவினையொட்டி அமைக்கப்பட்ட தமிழ்நாடு திறன் போட்டி காண்காட்சியில் காட்சிப் படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளின் அறிவியல் தொழில்நுட்ப படைப்புகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார்.

திண்டுக்கல்,ஜன.8–

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திண்டுக்கல்லில் இன்று காலை நடைபெற்ற அரசு விழாவில், ரூபாய் 1595 கோடியில் 111 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து. 212 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 2 லட்சத்து 62 ஆயிரத்து 864 பயனாளிகளுக்கு ரூபாய் 1000 கோடியே 82 லட்சத்து 86 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கனார்.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக மதுரையில் இருந்துசாலை மார்க்கமாகதிண்டுக்கல் வருகைதந்த முதலமைச்சரை மாவட்ட எல்லையான பாண்டியராஜபுரம் பகுதியில் அமைச்சர்கள் வரவேற்றனர். ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி ஆகியோர் தலைமையில் திண்டுக்கல் வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சரை சாலை நெடுகிலும் சிறப்பான ஏற்பாடுகள் செய்து வரவேற்றனர். திண்டுக்கல் மாவட்டத்திற்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சரை திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேற்றார். திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வேலுநாச்சியார் வளாகத்தில், இன்று காலை 10 மணி அளவில் முதல்வர் ஸ்டாலினை திண்டுக்கல் மாவட்டத்தில் முடிவற்ற திட்ட பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், அரசின் பல்வேறு நலத் திட்டங்களை பயனாளிகளுக்கு வழங்கினார். குடிநீர் வடிகால் வாரியம், கூட்டுறவுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மாநகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பேரூராட்சித் துறை, கல்வித்துறை, இலங்கைத் தமிழர் மறுவாழ்வுத்துறை, இந்து சமய அறநிலையத் துறை, சார்பில் 111 முடிவுற்ற திட்ட பணிகளான 337.84 கோடி மதிப்பிலான புதிய அரசு கட்டிடங்களை திறந்து வைத்தார். மேலும் மாநகராட்சிக்கு குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ரூ. 132.52 கோடி மதிப்பிலான குடிநீர் திட்டங்களை துவக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து ஆத்தூர் பகுதியில் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ரெட்டியார்சத்திரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என ரூபாய் 90 கோடி மதிப்பிலான புதிய கட்டிடங்களை திறந்து வைத்தார். முதலமைச்சர் வருகையை முன்னிட்டு 6 மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் மாவட்ட எல்லை முதல் விழா நடைபெறும் வேலுநாச்சியார் வளாகம் வரை தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

முன்னதாக இந்தவிழாவில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விமானம் மூலம் சென்னையில் இருந்து நேற்று இரவு மதுரை வந்தார். விமான நிலையத்தில் அமைச்சர்கள் ஐ. பெரியசாமி, தங்கம் தென்னரசு, சாத்தூர் ராமச்சந்திரன், பெரியகருப்பன், மூர்த்தி, சக்கரபாணி, மற்றும் கலெக்டர் பிரவீன் குமார், போலீஸ் கமிஷனர் லோகநாதன், மாநகராட்சி கமிஷனர் சித்ரா விஜயன் மற்றும் பலர்வரவேற்றனர். பிறகுவிமானநிலையத்தில் இருந்து வெளியே வந்த முதலமைச்சரை தி. மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் கட்சி கொடி ஏந்தி உற்சாக கோஷமிட்டு வரவேற்றனர். பின்னர் முதலமைச்சர் வேன் மூலம் வேலம்மாள் மருத்துவக்கல்லூரி அருகே உள்ள தனியார் விடுதிக்கு புறப்பட்டு சென்றார்.



கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் வடக்கு ஊராட்சி ஒன்றியம் ஆட்சிபட்டி ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாய விலைக்கடையில் பொங்கல் பரிசு தொகுப்பிற்காக வேண்டி வரப்பெற்றுள்ள கரும்பு உள்ளிட்ட பொருட்களை கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் பொள்ளாச்சி வட்டாட்சியர் ஜெயக்குமார் உள்ளார்.



விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் அருகே மல்லி கிராமத்தில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளது. இது பற்றிய செயல் விளக்கத்தை கலெக்டர் சுகபுத்ரா ஆய்வு செய்தார்.

## திருப்பத்தூரில் தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி சங்கங்களின் கூட்டமைப்பினர் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்



திருப்பத்தூர் ஜன.8

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் பாரத ஸ்டேட் பேங்க் முன்பு தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் ஓய்வு பெற்ற சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர் நல சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி சுமார் 1000க்கும் மேற்பட்டோர் தமிழக அரசுக்கு எதிரான கண்டன கோஷங்கள் எழுப்பி ஒருநாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தின் முக்கிய கோரிக்கை களாக, தேர்தல் வாக்குறுதிபடி வருவாய் கிராம உதவியாளர்களுக்கு உள்ளது போல் சிறப்பு பென்ஷன் தொகை 6750 ரூபாய் அகவிலைப் படியுடன் வழங்கிட வேண்டும். சத்துணவு அங்கன்வாடி பணியாளருக்கு இள நிலை உதவியாளர் நிலைக்கு 19500 மற்றும் சமையல் உதவியாள ருக்கு 15700, அடிப்படை யில் காலம் வரை ஊதியம் வழங்கிட வேண்டும். அரசு காலி பணியிடங்களை நிரப்பும்போது பத்து ஆண்டு பணி முடித்த தகுதி உள்ள சத்துணவு அங்கன்வாடி பணியாளர்களை ஐம்பது விழுக்காடு அடிப்படையில் ஈர்த்திட வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிகளை வலியுறுத்தி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது இந்த போராட்டத்தில் ஈடுபட்ட இரண்டு பெண்கள் திடீரென மயக்கம் போட்டு கீழே விழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து தமிழக அரசுக்கு எதிராக பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பினர். அப்போது நாங்க தற்போது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு 20% மட்டும் தான் இங்க வந்திருக்கோம், முழுசா வந்தா தாங்காது, இப்பயாவது எங்க ஓட்டு எவ்வளவு இருக்குன்னு தெரிஞ்சுக்கோங்க, எங்க ஓட்டு உங்களுக்கு வேண்டாமா? தேர்தல் வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்று என கோஷங்கள் எழுப்பி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு உறுதிமொழிக்குழுத் தலைவர் பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை முதன்மை செயலாளர் சீனிவாசன், கலெக்டர் தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் மாங்குடி, மோகன், சக்கரபாணி ஆகியோர் முன்னிலையில் 58 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 47 லட்சத்து 36 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், ஆணையாளர் முகம்மது ஷபீர் ஆலம் உள்பட பலர் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம் தக்கலை அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற உள்ள நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் முன்னேற்பாடு பணிகளை கலெக்டர் அழகுமீனா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் சத்துணவு ஊழியர்கள் சங்கம் சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோட்டை மைதானத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு, மாத விடுமுறை, காலிப் பணியிடம் நிரப்புதல், பதவி உயர்வு, அரசு ஊழியர்களாக அறிவித்தல், உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், ஆய்வு மேற்கொண்டு, அலுவலகப் பதிவேடுகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் கோப்புகளை பார்வையிட்டார்கள். உடன் பாலக்கோடு வட்டாட்சியர் அசோக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு & பாண்டிச்சேரி மாநிலத்தின் இரட்சணிய சேனை மாகாணத் தளபதி லால்லிம் புய்ச் சாங்துவை முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரும், நெல்லை புறநகர் மாவட்ட அதிமுக பொருளாளருமான செளந்தரராஜன் புத்தாண்டை முன்னிட்டு சந்தித்து ஆசி பெற்றார். நிகழ்வின்போது ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் அந்தோணி அமலராஜா, ராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், வள்ளியூர் வடக்கு ஒன்றிய செயலாளர் லாசர், செல்வம் மற்றும் மேஜர் எபனேசர் ஆகியோர் உடன் இருந்தனர்.



அக்னி சிறகுகள் மற்றும் நண்பர்கள் இணைந்து உடுமலை திருமூர்த்தி மலையில் உள்ள பழங்குடியின மக்களுக்கு 5 கிலோ கொண்ட 11கிலோ அரிசி சிப்பம் மற்றும் குழந்தைகள் படிப்புக்கு தேவையான எழுது பொருட்கள் வழங்கப்பட்டது.

## பாரம்பரிய நடனங்கள் ஆடி தமிழ் புத்தாண்டை வரவேற்கும் உடுமலை கிராம மக்கள்!

உடுமலை,ஜன.8–

ஆண்டும் முழுவதும் விவசாய பணிகளில் ஈடுபடும் மக்கள் இயற்கைக்கும்,கால் நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாகவும், தைதிருநாளாம்தமிழ்ப்புத்தாண்டை வரவேற்றும் பொங்கல் விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி தமிழர்களின் பாரம்பரிய நடனங்களை இரவு நேரங்களில் நடனங்கள் ஆடியும், பாட்டுக்கள் பாடியும் கிராமங்களில் கொண்டாடி மகிழ்வது காலம் காலமாக இருந்து வருகிறது.

அந்த வகையில் உடுமலையை அடுத்துள்ள குறிஞ்சேரி, சின்ன வீரம்பட்டி, ராசாவூர், பொட்டையம் பாளையம், சுண்டக்காம்பாளையம், சிவசக்தி காலணி, மற்றும் பெதப்பம்பட்டி. உள்ளிட்ட சுமார் 10 க்கும் மேற்பட்ட கிராமங்களில் தை திருநாள் விழா உணர்வுப் பூர்வமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி மார்கழி மாதம் இரவு 7 மணி தொடங்கி நள்ளிரவு வரை கிராமமே ஒன்று கூடி ஆண்டுதோறும் மகிழ்ச்சியாக கொண்டாடி வருகிறது. இந்த நிகழ்ச்சி யில் சலங்கை மாடு அழைப்பது என்பதே பிரதான நிகழ்ச்சியாகும். உரிமிமேளசப்தத்துடன்சலங்கை மாட்டை அடக்க ஒருவர் இரு கைகளில் குச்சிகளுடன் அதன் முன்பு போகும் போது மாடு அந்த நபரை முட்ட வருவதும் அதை அவர் அடக்க முயற்சிப்பதும் கிராம மக்கள் அனைவரையும் வீரம் கொள்ளும் நிகழ்ச்சியாகும்.

பின்னர் ஆண்கள் அனைவரும் வரிசையாக நின்று கொண்டு ஒயிலாட்டம், தேவராட்டம் போன்ற ஆட்டங்கள் ஆடுவதும், பெண்கள் குலவைச் சப்தத்துடன் கும்மி பாட்டு பாடி ஆடுவதும் சிறப்பான நிகழ்ச்சிகளாகும். மார்கழி மாதம் இரவு நேரங்களில் நடை பெறும் இந்த ஆட்டமும், பாட்டும் தொடர்ந்து தை 1 ம் தேதி வரை நடைபெறும். இது குறித்து கிராம மக்கள் கூறியது:

சலங்கைமாடுஆட்டம்ஆடிமுடிந்தவுடன் தை 2 ம் தேதி மாட்டுப் பொங்கலன்று இந்த மாட்டை கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்குள் வரவழைத்து அந்த மாட்டிற்கு நவ தானியங்களை தீவனமாக போடுவோம்.

இதன் பின்னர் தை 3 ம் தேதி உடுமலை அருகே பெதப்பம்பட்டியை அடுத்து உள்ள ஆல்கொண்டமால் கோவிலுக்கு கால்நடைகளை அழைத்துச் சென்று படையலிட்டு வழிபடுவோம். பல நூறு வருடங்களாக பாரம்பரியமாக நடந்து வரும் இந்த நிகழ்ச்சிகள் தற்போது கால மாற்றங்களால் கொஞ்சம், கொஞ்சமாக மறைந்து வருவது எங்களுக்கெல்லாம் வருத்தமாக உள்ளது. ஆனாலும் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மூத்த, வயதானவர்கள் உள்ளவரை இந்த கலைகளை அழிய விடமாட்டோம் என்றனர்.

## தாராபுரத்தில் வேன் மோதி பள்ளி மாணவி சாவு!

தாராபுரம் , ஜன.8

திருப்பூர் மாவட்டம்தாராபுரம் நல்விக் கவுண்டம்பாம் கிராமத்தை சேர்ந்த முருகன் என்பவரின் மகள் கோபிகா (வயது 18). தாராபுரத்தில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார். தினமும் பள்ளிக்கு செல்ல நல்லிகவுண்டம் பாளையத்தில் இருந்து தொப்பம்பட்டிக்கு மொபட்டில் செல்வதுடன் அங்கிருந்து பஸ் ஏறி தாராபுரத்தில்பள்ளிக்கு சென்று வந்தார்.



அதேப்போல் இன்று காலை தொப்பம்பட்டிக்கு மொபட்டில் வந்த கோபிகா அங்குள்ள வாகன காப்பகத்தில் தனது மொபட்டை நிறுத்தி விட்டு, சாலையை கடந்து பஸ் நிறுத்தத்திற்கு செல்ல முயன்றார். அப்போது அந்த வழியாக காங்கயம் பகுதியை சேர்ந்த முருக பக்தர்கள் வந்த வேன் கோபிகா மீது மோதி கவிழ்ந்தது.இந்த விபத்தில் கோபிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வேனில் பயணம் செய்த காங்கேயம் மற்றும் சிவன்மலை பகுதியை சேர்ந்த முருக பக்தர்கள் செல்வ தரணிதரன் (28), ஜவகர் (49). பழனிச்சாமி (31),அடைந்தனர் செந்தில் சுருமார் (43), தாமரை க்கண்ணன் (38), தேவசேனாபதி சாயம் அருண்குமார் (36) மற்றும் டிரைவர் குமாரசாமி (36) உள்ளிட்ட 16 பேர் காயம் அடைந்தனர் அவர்களை அப்பகுதி பொதுமக்கள் மீட்டு தாராபுரம் அரசு மருத்துவ மனையில் சேர்த்தனர். இதில் 2 பேர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்து குறித்து தாராபுரம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். முருக பக்தர்கள் அறுபடை முருகன் கோவில்களுக்கு சென்று விட்டு இன்று காலை ஊர் திரும்பிய போது விபத்தில் சிக்கி உள்ளனர். மேலும் மாணவி உயிரிழந்தது அப்பகுதி பொதுமக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



## ஈரோட்டிற்கு வரும் 15-ம் தேதி வருகை தரும் ஆதியோகி ரத யாத்திரை: ஈஷா மஹாசிவராத்திரி முன்னெடுப்பு!

ஈரோடு, ஜன.8

ஈஷா மஹாசிவராத்திரி விழாவை முன்னிட்டு, தென்கைலாய பக்தி பேரவை, சிரவை மற்றும் பேரூர் ஆதீனங்கள் இணைந்து நடத்தும் 'ஆதியோகி ரத யாத்திரை' கொங்கு மண்டலப் பகுதிகளில் உற்சாகமாக நடைபெற்று வருகிறது. இது தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு ஈரோட்டில் நடைபெற்றது. இதில் பேசிய பேரவை நிர்வாகிகள், கோவைக்கு வர இயலாத பக்தர்கள் தங்கள் ஊர்களிலேயே ஆதியோகியை தரிசிக்கவும், மஹாசிவராத்திரி விழாவிற்கு அழைப்பு விடுக்கவும் இந்த யாத்திரை நடத்தப்படுவதாகத் தெரிவித்தனர். கடந்த டிசம்பர் 17ம் தேதி கோவையில் தொடங்கப்பட்ட இந்த ரத யாத்திரை, பாடல் பெற்ற திருத்தலங்கள் வழியாகப் பயணித்து இன்று (ஜன.6) ராசிபுரத்தை வந்தடைந்தது. இதனைத் தொடர்ந்து நாமக்கல், திருச்செங்கோடு, கரூர், கொடுமுடி மற்றும் காங்கேயம் வழியாகப் பயணித்து, ஜனவரி 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் ஈரோடு மாநகரை வந்தடைகிறது. பின்னர் ஜனவரி 17ல் பெருந்துறைக்கும், 18ல் சத்தியமங்கலத்திற்கும் ரதம் செல்ல உள்ளது.

தமிழகத்தின் நான்கு திசைகளிலும் பயணிக்கும் 4 ஆதியோகி ரதங்கள், இரண்டு மாத காலத்தில் சுமார் 30,000 கி.மீ தொலைவு பயணிக்க உள்ளன. வரும் பிப்ரவரி 15ம் தேதி கோவையில் நடைபெறும் மஹாசிவராத்திரி விழா, ஈரோடு மகேஸ்வரி மஹாலில் உட்பட தமிழகம் முழுவதும் 60க்கும் மேற்பட்ட இடங்களில் நேரலை செய்யப்பட உள்ளது. ரத யாத்திரை வரும் இடங்களில் பொதுமக்கள் மலர்கள், பழங்கள் மற்றும் நைவேத்தியங்களை சமர்ப்பித்து ஆதியோகியை வழிபடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொம்மை தேள், பாம்புகளைப் பயன்படுத்தி தங்கச் சங்கிலி பறித்த 36 பெண்கள் கைது!

### பஸ், ஆட்டோக்களில் பயணித்து கைவரிசை!!

கோரக்பூர், ஜன.8–

உத்தரப் பிரதேச மாநிலம் கோரக்பூரில் சமீப காலமாக பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் தனியாகப் பயணிக்கும் பெண்களை குறிவைத்து, பட்டப்பகலில் நகைகளைத் திருடி வருவதாக போலீசாருக்கு புகார்கள் வந்தன. அப்போது பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. அதன்படி பிளாஸ்டிக்கில் தயாரித்த போலி தேள், பாம்பு, பல்லி ஆகியவற்றை இந்த மோசடிக் கும்பல் ஆயுதமாக பயன்படுத்தி தங்கச் சங்கிலி, நகைகள் போன்றவற்றை பறித்து வந்துள்ளனர் .

இந்தக் கும்பலில் உள்ள பெண்கள் சாதாரண பயணிகளைப் போல பேருந்துகளில் ஏறுவார்கள். அவர்கள் பெண்கள், வயதானவர்களின் அருகில் அமர்ந்து அவர்களுடன் நைசாக பேசினர். மேலும் ஆட்டோக்களில் அவர்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு கூடவே பயணிப்பார்கள்.

அந்த சமயத்தில் போலி தேள்கள், பாம்புகள் அல்லது பல்லிகளை அவர்கள் மீது போட்டுவிடுவார்கள். இதனால் அவர்கள் அலறி ஓடுவார்கள். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உடன் இருக்கும் மோசடி நபர்கள் பாதிக்கப்பட்டவரை அவர்கள் அணிந்துள்ள நகைகள், சங்கிலி உள்ளிட்ட மதிப்புமிக்க பொருட்களுடன் தப்பிச் செல்வார்கள்.

சில சந்தர்ப்பங்களில், அவர்கள் கழுத்தணிகளை இழுக்க கையில் வைத்துள்ள ஊக்கு போன்ற ஊசிகளையும் பயன்படுத்துவார்கள்.

இதுபோன்ற நகை, சங்கிலி பறிப்பு சம்பவங்கள் கோரக்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை குறிவைத்து தொடர்ச்சியாக நடந்து வருவதாக புகார்கள் வந்ததைத் தொடர்ந்து, கும்பல் தலைவன் விஷ்ணுவை போலீசார் கைது செய்தனர்.

அவனிடம் நடத்திய கடுமையான விசாரணையில் ஒரு நெட் ஒர்க் இருப்பதை போலீசார் கண்டறிந்தனர். இந்த கும்பலில் அதிகமாக பெண்கள் இருந்தனர். இதன் மூலம் ஜான்பூர், பல்லியா மற்றும் சித்தார்த்நகர் உள்ளிட்ட 11 மாவட்டங்களைச் சேர்ந்த 36 பெண்கள் மற்றும் நான்கு ஆண்களை போலீசார் கைது செய்தனர்.

இவர்கள் அனைவரும் வயது 20 முதல் 50 வயதுக்குட்பட்ட பெண்கள் ஆவர். இது குறித்து போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

## பல்வேறு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் அழிப்பு!

### அவிநாசி போலீசார் நடவடிக்கை!!

அவிநாசி,ஜன.8–

பல்வேறு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 500 கிலோ புகையிலை, பான் மசாலா பொ ருட்களை அவிநாசி போலீசார் எரித்து அழித்தனர்.

அவிநாசி காவல் நிலையத்தில் புகையிலை மற்றும் பான் மசாலா விற்பனைக்கு தடைவிதிக்கும் சட்டத்தின் கீழ் பல்வேறு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட, தமிழக அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 500 கிலோ புகையிலை பொருட்களை அவிநாசி புதிய பேருந்து நிலையத்திற்கு பின்புறம் உள்ள குப்பை கிடங்கில், அவிநாசி காவல் ஆய்வாளர் ராஜ பிரபு, உணவு பாதுகாப்பு அலுவலர் ஸ்டாலின் பிரபு, சுகாதார ஆய்வாளர் அரவிந்தன், வருவாய் ஆய்வாளர் மகேஸ்வரி, பழங்கரை கிராம நிர்வாக அலுவலர் லதா ஆகியோர் முன்னிலையில் அவிநாசி நகராட்சி தூய்மை பணியாளர்கள் மூலமாக எரித்து அழிக்கப்பட்டது.

...விரைவில்...
உங்கள் உள்ளாட்சி அரசு நாளிதழ்...
அறிவோ ஆன்மீகம் ஜோதிட செய்திகள்.....
வாழ்விலும், தொழிலிலும் உள்ள அனைத்து பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு வாழ்வில் நிரந்தர தீர்வு காண, "வாழ்வில் வெற்றி பெற்று", "வாழ்வில் மகிழ்ச்சியுடன் வாழ" வழிகாட்டுகின்றார்.
40 ஆண்டுகளா ஆன்மீகம் மற்றும் ஜோதிட பணிகளை செய்து வரும்...
சிவத்திரு. சிவமணி சுவாமிகள்
96593 20245 - 98426 79941
உள்ளாட்சி அரசு நாளிதழ்

## வீட்டின் பூட்டை உடைத்து நகை திருடியவர் கைது!

பவானி.ஜன.8–

ஈரோடு மாவட்டம் பவானி மண் தொழிலாளி வீதி விநாயகர் கோயில் பகுதியை சேர்ந்தவர் மணி (39). கடந்த 1.1.2026 குடும்பத்துடன் மேல்மருவத்தூர் ஓம் சக்தி கோயிலுக்கு சென்றார். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்து பீரோவில் உள்ள 1/14 பவுன் தோடு மற்றும் மோதிரம் வெள்ளி, வெள்ளி கொலுசு களை மர்ம நபர் திருடிச் சென்றுள்ளான். நேற்று வீட்டிற்கு வந்து பார்க்கும் பொழுது உள்ளேஇருந்தபீரோக்கள் உடைக்கப்பட்டிருந்தது



அதிர்ச்சி அடைந்த வீட்டு உரிமையாளர் பவானி காவல் நிலையத்தில் புகார் செய்தார். புகாரி பேரில் பவானி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் பவானி கல் தொழிலாளி 2–வது வீதி சேர்ந்தவர் செல்வராஜ் மகன் மணி (39) என தெரிய வந்தது. போலீசார் அவரிடம் இருந்த நகைகளை மீட்டு பறிமுதல் செய்தனர். பின்னர் போலீசார் கைது செய்தனர்.

## புத்தாண்டில் புதிய பழக்கங்கள் உடல் எடை பராமரிப்பில் முக்கிய பங்கு வகிக்கும் கலிபோர்னியா பாதாம்!


கோவை, ஜன.8

புத்தாண்டு துவங்கி உள்ள நிலையில், உடல் ஆரோக்கியம் குறித்து உறுதிமொழிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதில் உடல் எடையைக் கட்டுக்குள் வைப்பதே பலருடைய புத்தாண்டு உறுதிமொழியில் முதலிடத்தில் உள்ளது. கலிபோர்னியா பாதாம் வாரியத்துடன் இணைந்து நடத்தப்பட்ட புதிய கருத்துக்கணிப்பில், இந்திய நுகர்வோர் உடற்பயிற்சி செய்வது முதல் சத்தான உணவுகளைத் தேர்ந்தெடுப்பது வரை தெரியவந்துள்ளது. இவற்றில், காலை நேரப் பழக்கவழக்கங்கள் மற்றும் காலை உணவில் கலிபோர்னியா பாதாம் தொடர்ந்து முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இதைச் சாப்பிடுவதால் நீண்ட நேரம் பசி எடுக்காமல் வயிறு நிறைந்த உணர்வு ஏற்படுவதாகவும், தேவையற்ற உணவின் மீதான ஆசையைக் கட்டுப்படுத்த முடிவதாகவும், நாள் முழுவதும் சோர்வில்லாமல் இருக்கத் தேவையான ஆற்றல் கிடைப்பதாகவும் பலர் கருதுகிறார்கள். மேலும், 63 சதவீதம் பேர் தினமும் உடற்பயிற்சி செய்தல், அதிக தண்ணீர் அருந்துதல் மற்றும் சர்க்கரை பயன்பாட்டைக் குறைத்தல் போன்ற தொடர்ச்சியான வழிமுறைகள் மூலம் தங்கள் உடல் எடையைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதாகக் கூறியுள்ளனர்.உணவின் மீது மக்கள் கொண்டுள்ள இந்த அக்கறையானது, இந்தியா முழுவதும் பாதாம் சாப்பிடும் பழக்கத்தில் பிரதிபலிக்கிறது. இது பாதாம் தொடர்பான விழிப்புணர்வைக் காட்டுகிறது. பதிலளித்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் அதாவது 52 சதவீதம் பேர் பாதாமை ஒட்டுமொத்த உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்துடனும், 41 சதவீதம் பேர் நோய் எதிர்ப்பு சக்தியுடனும், 39 சதவீதம் பேர் புரதச்சத்துக்காகவும் சாப்பிடுவதாக கூறுகிறார்கள். குறிப்பிடத்தக்க வகையில், 75 சதவீதம் பேர் அத்தியாவசிய சத்துக்களுக்காக இதைத் தினமும் சாப்பிடுவதாகவும், 84 சதவீதம் பேர் இது ஒரு ஆரோக்கியமான உணவு என்றும் கூறுகிறார்கள்.



## சுமித் ராய், நிர்வாக இயக்குநர் & முதன்மை நிர்வாக அதிகாரி, எடெல்வெய்ஸ் லைஃப் இன்சூரன்ஸ்!

சென்னை, ஜன.8



2025 ஆண்டு பல சவால்கள் இருந்தபோதிலும் இந்திய பொருளாதாரம் உறுதியுடன் நிலைத்ததாக எடெல்வெய்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் நிர்வாக இயக்குநர் மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி சுமித் ராய் தெரிவித்துள்ளார். வட்டி விகிதக் குறைப்பு, தனிநபர் வரி சீர்திருத்தங்கள் மற்றும் ஜிஎஸ்டி மாற்றங்கள் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய வருமானத்தை உயர்த்துவதுடன், நுகர்வு மற்றும் வளர்ச்சிக்கும் வலுவான ஆதரவாக அமைந்தன என்றார். வாழ்க்கை காப்பீட்டு துறை மாறிவரும் விதிமுறைகள் மற்றும் வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு, தொடர்ச்சியான வளர்ச்சியை பதிவு செய்துள்ளதாக அவர் கூறினார். ஜிஎஸ்டி விலக்கு, பாதுகாப்பு மற்றும் பங்கேற்பில்லாத தயாரிப்புகளுக்கான அதிகரித்த தேவை, மேலும் AI போன்ற தொழில்நுட்ப புதுமைகள் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும், தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளை உருவாக்கும் பாதையை அமைத்துள்ளதாக அவர் விளக்கினார். மேலும், 100% அந்நிய நேரடி முதலீட்டு அனுமதி மற்றும் புதிய நிறுவனங்களின் நுழைவு துறையில் போட்டி அதிகரித்து, சேவை தரம் மற்றும் விநியோக முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் சுமித் ராய் தெரிவித்துள்ளார். 2026 ஆம் ஆண்டில் டிஜிட்டல் மற்றும் பாரம்பரிய சேனல்கள் ஒருங்கிணைந்து, வாடிக்கையாளர் மையப்படுத்தப்பட்ட, தொழில்நுட்ப ரீதியாக வலுவான காப்பீட்டு சூழலை உருவாக்கும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



ஈரோடு மாவட்ட கலெக்டர் கந்தசாமி கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வெள்ளாளபாளையம் பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் பொங்கல் பரிசு தொகுப்பை பெற டோக்கன்கள் வழங்கப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் இணைப்பதிவாளர் கந்தராஜா உள்பட பலர் உள்ளனர்.

### காத்திருப்போர் பட்டியலில் இருந்த

# 20 இன்ஸ்பெக்டர்களுக்கு மீண்டும் பணி ஒதுக்கீடு!

சென்னை, ஜன.8–

சென்னை காவல் துறையில் காத்திருப்போர் பட்டியலில் இருந்த 20 காவல் ஆய்வாளர்களுக்கு மீண்டும் பணி வழங்கப்பட்டது. சென்னை பெருநகர காவல் துறையில் காத்திருப்போர் பட்டியலில் இருந்த 20 ஆய்வாளர்கள் உள்பட 21 ஆய்வாளர்களை பணியிட மாற்றம் செய்து ஆணையர் ஏ.அருண் உத்தரவிட்டார்.

குறிப்பாக, காத்திருப்போர் பட்டியலில் இருந்த ஆய்வாளர்கள் எஸ்.லோகேஸ்வரன் நுங்கம்பாக்கம் குற்றப்பிரி வுக்கும், எஸ்.மணி சூளைமேடு சட்டம்ஒழுங்கு காவல் நிலையத்துக்கும், எஸ்.சுரேஷ் ஜாம்பஜார் சட்டம்ஒழுங்கு காவல் நிலையத்துக்கும், எஸ்.முத்துராஜா வில்லிவாக்கம் சட்டம்ஒழுங்கு காவல் நிலையத்துக்கும், எம்.ராஜசேகர்அண்ணா சாலை குற்றப் பிரிவுக்கும், எஸ்.மதன்குமார் எஸ்பிளனேடு குற்றப்பிரிவுக்கும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல, காத்திருப்போர் பட்டியலில் இருந்த மொத்தம் 20 காவல் ஆய்வாளர்கள் மீண்டும் காவல் நிலையப் பணிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சூளைமேடு சட்டம்ஒழுங்கு காவல் நிலைய ஆய்வாளர் எஸ்.சக்தி வேலாயுதம் வளசரவாக்கம் சட்டம்ஒழுங்கு காவல் நிலையத்துக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# பாளை அருகே மதுபோதை தகராறில் வாலிபர் அடித்துக்கொலை!

நெல்லை, ஜன.8

பாளையை அடுத்த சீவலப்பேரி அருகே உள்ள தோணித்துறை ஊருக்கு ஒதுக்குப்புறமாக சுடுகாடு உள்ளது. இந்த சுடுகாட்டு பகுதியில் இன்று காலை சுமார் 30 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் மர்மமான முறையில் இறந்துகிடந்தார். இதைஅந்தவழியாகசென்றவர்கள்பார்த்து, சீவலப்பேரி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பார்த்தனர். அப்போது உடலில் காயங்களுடன் வாலிபர் இறந்து கிடந்தது தெரிய வந்தது. இதனால் அவர் அடித்து படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று போலீசார் சந்தேகம் அடைந்தனர். மேலும் பிணமாக கிடந்தவர் உடல் அருகே மது பாட்டில்கள் கிடந்ததால், போதையில் ஏற்பட்ட தகராறில் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பது உறுதியானது. அதைத்தொடர்ந்து நடத்திய விசாரணையில் கொலை செய்யப்பட்ட நபர் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே உள்ள முதலூரை சேர்ந்த மார்ட்டின்(30) என்பது தெரியவந்தது. இதையடுத்து அவர் சீவலப்பேரி பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்த இடத்தில் மார்ட்டின் தனது நண்பர்களுடன் அமர்ந்து மதுகுடித்து உள்ளார். அதில் நண்பர்களுடன் மது போதையில் ஏற்பட்ட தகராறில் மார்டின் அடித்துக்கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் போலீசார் வழக்குப்பதிந்து அவரது நண்பர்கள் குறித்து விசாரித்து அவர்களை தேடி வருகின்றனர்.

### சபரிமலையில் திரண்ட பக்தர்கள்

# 8 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம்!

குமுளி, ஜன.8–

சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது 8 மணிநேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். சபரிமலை ஐயப்பன் கோயிலில் 14–ம் தேதி மகரவிளக்கு பூஜை நடைபெற உள்ளது. இதற்காக கடந்த30–ம்தேதிமாலைகோயில்நடைதிறக்கப்பட்டது. இதுவரை சுமார் 6.5 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்துள்ளனர். உற்சவ நிகழ்ச்சிக்கு இன்னும் ஒரு வாரமே உள்ளதால் பக்தர்கள் கூட்டம் கடந்த 2 நாட்களாகவே அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் சபரிமலை வழித்தடங்களில் இதுவரை இல்லாத கூட்டம் நேற்று இருந்தது.எரிமேலியில் இருந்து பெருவழிப்பாதை, பம்பை, கணபதி கோயில்,



மரக்கூட்டம், அப்பாச்சிமேடு, பெரிய நடைப்பந்தல் உள்ளிட்ட பகுதிகளிலும் கட்டுக்கடங்காத கூட்டம் இருந்தது.குறிப்பாகசந்நிதானத்தில்இருந்துமரக்கூட்டம் வரை ஒதுங்கக்கூட இடம் இல்லாத நிலையில் நெரிசல் ஏற்பட்டது. மேலும் பம்பை பாலத்தின் தொடக்கத்தில் இருந்து திருவேணி சங்கமம், கணபதி கோயில் வாயில் வரை நெரிசல் ஏற்பட்டது. இருமுடியுடன் 8 மணி நேரத்துக்கும்மேல்காத்திருந்துசந்நிதானத்தைஅடையும் நிலையேநேற்றுஇருந்தது.இதனால்குடிநீர்,கழிப்பிடம், உணவுக்கு பக்தர்கள் சிரமப்பட்டனர்.



பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். அருகில் கலெக்டர் துர்காமூர்த்தி, மேயர் கலாநிதி உள்பட பலர் உள்ளனர்.

### தொண்டர்கள் விரும்புகிறார்கள்:

# ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பதில் உறுதியாக உள்ளோம்!

## கே.எஸ்.அழகிரி திட்டவட்டம்!!

திருவரூர்,ஜன.8–

காங்கிரஸ் தொண்டர்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு வேண்டும் என விரும்புகிறார்கள். அதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என அக்கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் கே.எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.



திருவாரூரில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது

ஒவ்வொரு அரசியல் கட்சியும் வளர வேண்டும், அதிகாரத்தில் பங்கு வேண்டும் என சொல்வது நியாயமானது. இதை காங்கிரஸ் கட்சி மட்டும் சொல்லவில்லை. வைகோ, திருமாவளவன் மற்றும் கம்யூனிஸ்ட்களும் அதிக தொகுதிகள் ஒதுக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

எங்களைப் பொறுத்த வரை திமுக எங்களுக்கு சிறந்த தோழமைக் கட்சி. நாங்கள் அவர்களிடம் பேரம் பேசத் தேவையில்லை. சிறந்த ஆட்சியைமுதல்வர்ஸ்டாலின் வழங்கி வருகிறார். அதற்காக எங்கள் கட்சி கீழே போக வேண்டும் என்று நாங்கள்விரும்பவில்லை.

காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு வேண்டும் என விரும்புகிறார்கள். அதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

அது தவறில்லை.நண்பர்களாக இருக்கிறவர்களில் ஒருவர் நல்ல சட்டை போட்டுள்ளார். அதே போல, எனக்கும் ஒரு சட்டை கொடு என்று கேட்பது தவறு இல்லை. அதற்காக அவர் போட்டிருக்கிற சட்டையை பறிக்க வேண்டும் என்பது நோக்கமில்லை.

அதிமுகவை பொறுத்த வரை விளிம்பு நிலைக்கு சென்றுவிட்டது. தமிழகத்தின் உரிமையைப் பற்றி அவர்களால் பேச முடியவில்லை. அமித் ஷா தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்கின்றார், ஆனால், பழனிசாமி அதிமுக தலைமையிலான ஆட்சி அமையும் என்கிறார். அந்த கூட்டணியைப் பொறுத்த வரை, எங்களைப்போன்ற தெளிவு இல்லை. கருத்து உடன்பாடு கூட அவர்களிடம் இல்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



கேரள மாநிலம் வயநாடு காட்டுப்பகுதியில் உள்ள சிற்றருவியில் தண்ணீர் குறைவாக விழுந்தாலும் சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்கிறார்கள்.

# உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் விலையில்லா மடிக்கணினிகளை பெற்ற கோவை மாவட்ட கல்லூரி மாணவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நிறைந்தது மனம் நிகழ்ச்சி வாயிலாக தங்களது நன்றியினை தெரிவித்தனர்




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்ப்புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், முதல் தலைமுறை பட்டமளிப்பு (FG) திட்டம், போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகைத் திட்டம், சமூக நீதி விடுதிகள் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள்.

2025–26ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் செயற்கை நுண்ணறிவு உலகெங்கும் பெரும் தாக்கத்தை உருவாக்கி வரும் இந்த வேளையில், நமது மாணவர்களின் தொழில்நுட்ப அறிவையும் அவர்களின் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் தொடர்ந்து வழங்கிட வேண்டிய வரலாற்றுச் தேவை தற்போது எழுந்துள்ளது. அதனை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் பல்வேறு கலை, அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உள்ளிட்ட அனைத்து கல்லூரிகளிலும் பயின்று வரும் மாணவர்களுக்கு உயர்தொழில்நுட்பச் சாதனங்களை வழங்கிடத் திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாகஅடுத்த இரண்டு ஆண்டுகளில் 20 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக இந்நிதியாண்டில் 2000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பின்படி, மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெற “உலகம் உங்கள் கையில்” என்னும் அறிவூட்டும் கருப்பொருளின் கீழ் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்க்கு 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் மாநிலம் முழுவதும் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படும். முதல் கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் தொடக்க விழா தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையிலும் சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மைய வளாகத்தில் 05.01.2026 அன்று நடைபெற்றது.

“கல்வி அனைவருக்கும்! உயர்வு ஒவ்வொருவருக்கும்!” என்ற நோக்கத்துடன் தொழில்நுட்ப அறிவி



யலை வலுப்படுத்த Dell, Acer, HP போன்ற உலகத் தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த மடிக்கணினிகளில் Intel i3 / AMD Ryzen 3 Processor, 8 GB RAM, 256 GB SSD நினைவகம், Windows 11 Home Strategic மற்றும் BOSS Linux OS ஆகிய மென்பொருள்கள் முன்னதாக நிறுவப்பட்டுள்ள நிலையில், நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்டப் பணிகளுக்காக MS Office 365, மேலும் “அறிவைத் தேடும் இளைய தலைமுறைக்குப் புதிய சாளரம்” என அமையும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளான Perplexity Pro–வின் ஆறு மாத சந்தாவும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு மாணவருக்கும் உயர்தர மடிக்கணினி பையும் வழங்கப்பட்டுள்ளது. அரசு வழங்கும் விலையில்லா மடிக்கணினிகள், கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும், சமூக–பொருளாதார முன்னேற்றத்திற்கும் நேரடி ஆதாரமாக உதவுகின்றன. டிஜிட்டல் திறன் மேம்பாடு மூலம் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் (IT) துறை, மென்பொருள் உருவாக்கம் (Software Development), தரவு உள்ளீடு (Data Entry), டிஜிட்டல் சந்தைப்படுத்தல் (Digital Marketing), வரைகலை வடிவமைப்பு (Graphic Design), குறியிடுதல் (Coding), வலை வடிவமைப்பு (Web Designing), செயற்கை நுண்ணறிவு கருவிகள் (AI Tools), சுயாதீன வேலை (Freelancing) போன்ற துறைகளில் “புதிய வாய்ப்புகளைப் பெறும் புதிய தலைமுறை” என்ற அளவில் தகுதியானவர்களாக மாணவர்களை மாற்றிட உதவுகிறது.

கோயம்புத்தூர் மாவட்டம், வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த 74மாணவர்கள், 187 மாணவிகள் என மொத்தம் 261 மாணவ மாணவியர்களுக்கும், தொண்டாமுத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சேர்ந்த 60 மாணவர்கள், 180 மாணவிகள் என மொத்தம் 240 மாணவ மாணவியர்களுக்கும், அனைக்கட்டி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை சேர்ந்த 61 மாணவர்கள், 15 மாணவிகள் என மொத்தம் 76 மாணவ மாணவியர்களுக்கும், அரசு தொழில்நுட்ப கல்லூரியை சேர்ந்த 353 மாணவர்கள், 395 மாணவிகள் என மொத்தம் 748 மாணவ மாணவியர்களுக்கும், கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி செவிலியர் பள்ளியை சேர்ந்த 89 மாணவியர்களுக்கும், அரசு மருத்துவ கல்லூரியை சேர்ந்த 92 மாணவர்கள், 89 மாணவிகள் என மொத்தம் 181 மாணவ மாணவியர்களுக்கும், அரசு பாலிடெக்னிக் கல்லூரியை சேர்ந்த 394 மாணவர்கள், 32 மாணவிகள் என மொத்தம் 426 மாணவ மாணவியர்களுக்கும், பொள்ளாச்சி நாச்சி முத்து பாலிடெக்னிக் கல்லூரி சேர்ந்த 481 மாணவர்கள், 48 மாணவிகள் என மொத்தம் 529 மாணவ மாணவியர்களுக்கும், சி.ஐ.டி சாண்ட்விட்ச் பாலிடெக்னிக் கல்லூரியை சேர்ந்த 171 மாணவர்கள், 18 மாணவிகள் என மொத்தம் 189 மாணவ மாணவியர்களுக்கும், கோயம்புத்தூர் தொழில்நுட்பகல்லூரியை சேர்ந்த 400 மாணவர்கள், 342 மாணவிகள் என மொத்தம் 742 மாணவ மாணவியர்களுக்கும், ஸ்ரீ கிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியை சேர்ந்த 219 மாணவர்கள், 15 மாணவிகள் என மொத்தம் 234 மாணவ மாணவியர்களுக்கும், பி.எஸ்.ஜி பாலிடெக்னிக் கல்லூ



ரியை சேர்ந்த 503 மாணவர்கள், 102 மாணவிகள் என மொத்தம் 605 மாணவ மாணவியர்களுக்கும், ஆக மொத்தம் 12 கல்லூரிகளை சேர்ந்த 4320 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

உலகம் உங்கள் கையில்” என்னும் அறிவூட்டும் கருப்பொருளின் கீழ் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த செல்வன். முகம்மது ஆசிப் நிறைந்தது மனம் நிகழ்ச்சி வாயிலாக தெரிவித்ததாவது,



என் பெயர் முகம்மது ஆசிப். எனது சொந்த ஊர் தஞ்சாவூர். தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் பி.எஸ்சி. ஹானர்ஸ் அக்ரிகல்ச்சர் (B.Sc Hons Agriculture) இறுதி ஆண்டு படித்துவருகிறேன். உலகம் செயற்கை நுண்ணறிவு எட்டியுள்ள இக்காலத்தில் நம் தமிழ்நாட்டு மாணவர்களின் தொழில்நுட்ப இடைவெளியினை குறைக்கவும், கற்றல் வளத்தினை மேம்படுத்தவும், தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மருத்துவக்கல்லூரி, தொழில்நுட்ப கல்லூரி உள்ளிட்ட உயர்கல்வி பயிலும் 10 இலட்சம் மாணக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மடிக்கணினி எங்கள் கற்றல் திறனை மேம்படுத்தவும், ஆராய்ச்சி படிப்பிற்கு செல்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ் புதல்வன், புதுமைப்பெண், நான் முதல்வன் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை தந்துள்ளார்கள். மேலும், இந்த விலையில்லா மடிக்கணினி திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் நிறைந்தது மனம் நிகழ்ச்சி வாயிலாக ஒட்டுமொத்த மாணவ சமுதாயம் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

“உலகம் உங்கள் கையில்” என்னும் அறிவூட்டும் கருப்பொருளின் கீழ் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த செல்வி. ஹாரிணி நிறைந்தது மனம் நிகழ்ச்சி வாயிலாக தெரிவித்ததாவது,

என் பெயர் ஹாரணி. எனது சொந்த ஊர் தென்காசி. தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் பி.எஸ்சி. ஹானர்ஸ் அக்ரிகல்ச்சர் (B.Sc Hons Agriculture) இறுதி ஆண்டு படித்துவருகிறேன். நவீன டிஜிட்டல் உலகத்தில் உயர்கல்வி பயிலும் அனைவருக்கும் மடிக்கணினி என்பது அவசியமான ஒன்றாக உள்ளது.

ஆனால் கல்லூரியில் பயிலும் எல்லாராலும் மடிக்கணினி வாங்கமுடியாது. இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மருத்துவக்கல்லூரி, தொழில்நுட்ப கல்லூரி உள்ளிட்ட உயர்கல்வி பயிலும் 10 இலட்சம் மாணக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதனைத்தொடர்ந்து, இன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் , நாடாளுமன்ற உறுப்பினர் எங்களுக்கு விலையில்லா மடிக்கணினியினை வழங்கினார்கள். இந்த மடிக்கணினி கல்லூரி மாணவர்களான எங்கள் கற்றல் திறனை மேம்படுத்தவும், இன்டார்ன்சிப் பெறுவதற்கும், ஆராய்ச்சி, வேலைவாய்ப்பு என அனைத்து வகையிலும் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இத்திட்டத்தை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் நிறைந்தது மனம் நிகழ்ச்சி வாயிலாக எங்கள் கல்லூரி மாணவ மாணவியர்கள் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இரா.சரண்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்(செய்தி)
கோயம்புத்தூர் மாவட்டம்.**



நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் மாற்றுக்கட்சியிலிருந்து விலகிய நிர்வாகிகள் ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கொ.ம.தே.க. வில் இணைந்தனர்.

## சோனியாகாந்தி பூர நலம்பெற முன்னாள் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எல். சுப்பிரமணியன் பிராத்தனை



டெல்லியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அன்னை சோனியா காந்தி உடல் நலக்குறைவால் அனுமதிக்கப்பட்டுள்ள அன்னை சோனியாகாந்தி அமைதிக் கப்பட்டுள்ளார்.

கிருஷ்ணகிரி முன்னாள் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எல். சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள தனது செய்தி குறிப்பில்

டெல்லி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு வரும் அன்னை சோனியா காந்தி அவர்கள் விரைவில் பூரண குணமடைந்து நாட்டு மக்களுக்கு சேவை செய்திட எல்லா வல்ல இறைவனை வேண்டி நாம் அனைவரும் பிராத்தனை மேற்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்.



## கிருஷ்ணகிரியில் 2—வது நாளாக இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் போராட்டம்!

கிருஷ்ணகிரி, ஜன.8

கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் சங்கம் சார்பில் இரண்டாவது நாளாக காத்திருப்பு போராட்டம் நடந்தது.

கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம் முன்பு, தமிழ்நாடு இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் சங்கம் சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இரண்டாவது நாளாக நேற்று காத்திருப்பு போராட்டம் நடந்தது.

இந்த போராட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ஜெய் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் கணேஷ் முன்னிலை வகித்தார். மாவட்ட பொருளாளர் கிஷோர் நன்றி கூறினார்.

போராட்டம் குறித்து நிர்வாகிகள் கூறியதாவது: சமவேலைக்கு சம ஊதியம் என்ற ஒற்றை கோரிக்கைக்காக இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர் சங்கம் கடந்த, 10 நாட்களாக சென்னையில் பள்ளிக் கல்வித்துறை வளாகம் உள்ளிட்ட பல இடங்களில் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக்கோரி போராட்டம் நடத்தியது. ஆனால் அரசு எங்கள் கோரிக்கையை செவிமடுக்காத காரணத்தால், அரையாண்டு தேர்வு விடுமுறை கடந்தும், கடந்த 5ம் தேதி முதல், பள்ளியை புறக்கணித்து அந்தந்த சி.இ.ஓ., அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டம் நடத்துவது என முடிவு செய்து, போராட்டம் நடந்து வருகிறது.

எங்கள் ஒற்றை கோரிக்கையான சமவேலைக்கு சமஊதியம் என்ற கோரிக்கை வெல்லும் வரை போராட்டம் தொடரும் என மாநில தலைவர் அறிவித்துள்ளார்.

நாங்கள் பள்ளிக்கு செல்லாமல் போராட விரும்பவில்லை என்றாலும், 16 ஆண்டுகள் போராட்டத்திற்கு தீர்வு கிடைக்காமல் இம்முறை பின்வாங்க போவதில்லை. இரண்டாவது நாளாக எங்கள் போராட்டம் நடந்து வருகிறது என்றனர்.

## கிருஷ்ணகிரியில் இருந்து சபரிமலை அன்னதானத்துக்கு ரூ.6 லட்சம் காய்கறிகள்! 2 வாகனங்களில் அனுப்பி வைப்பு!!

கிருஷ்ணகிரி, ஜன. 8

கிருஷ்ணகியில் இருந்து ரூ.6 லட்சம் மதப்பிலான காய்கறிகள் 2 வாகனங்களில் சபரிமலை பெருவழிபாதையில் நடைபெறும் அன்னதானத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.



கிருஷ்ணகிரி மற்றும் சூளகிரி பகுதியில், ஐயப்ப பக்தர்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து சேகரிக்கப்படும் காய்கறிகளை, சபரிமலை சேவகர்கள் கடந்த 5 ஆண்டுகளாக, அன்னதானத்திற்காக, 6முறைசபரிமலைக்குஅனுப்பி வைத்துள்ளனர். அதன்படி, 6வது ஆண்டாக 7வது முறையாக ரூ.6 லட்சம் மதிப்புள்ள ஆறரை டன் காய்கறிகளை 2 வாகனங்களில், சபரிமலை பெருவழிப்பாதையில் இரும்பொன்னிகரா மற்றும் காளைகட்டியில், மூன்று நாட்கள் நடக்கும் அன்னதானத்திற்காக கிருஷ்ணகிரியில் இருந்து அனுப்பி வைத்தனர்.

இதே போல், வயநாட்டில் நடந்த நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட 13 குடும்பங்களுக்கு, 2 மாதங்களுக்கு தேவையான அனைத்து வகையான அத்தியாவசிய பொருட்களையும் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பி டத்தக்கது.



கிருஷ்ணகிரி அருகே கழிவுநீர் கால்வாய் வசதியை ஏற்படுத்த வலியுறுத்தி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

## கபிலர்மலை அருகே 400 அடி பள்ளத்தில் லாரி கவிழ்ந்து தொழிலாளி பலி! டிரைவர் படுகாயம்!!

பரமத்தி வேலூர்,ஜன.8

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா கபிலர் மலை ஊராட்சி ஒன்றியம் நடந்தை கிராமம் பெரிய சூரம்பாளையத்தில் பல ஆண்டுகளாக சேலத்தைச் சேர்ந்த தனியாருக்கு சொந்தமான கிரைனைட் கல்குவாரி செயல்பட்டு வருகிறது. இந்த கல்குவாரியில் பலர் வேலை பார்த்து வருகின்றனர். பல வருடமாக இந்த கல்குவாரியில் கிரானைட் கற்களை வெட்டி எடுத்து வருகின்றனர். இதன் காரணமாக கல்குவாரியில் சுமார் 400 அடிக்குமேல் ஆழம் உள்ளது . இந்நிலையில் தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் தாலுகா செங்கனூர் அருகே முத்தம்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் சுப்பிரமணி(65) . இவரது மகன் வேணுகோபால்(36), என்பவர் லாரியை ஓட்டிச் சென்றார். அப்போது லாரியில் டிரைவருக்கு அருகே கர்நாடகா மாநிலம் சாம்ராஜ் மாவட்டம் அன்னூர் அருகே கோரநத்தம் பகுதியைச் சேர்ந்த டேவ நாயக் என்பவரது மகன் சுப்பிரமணி(65) என்பவர் அமர்ந்திருந்தார். லாரி டிரைவர் கல்குவாரிக்குள் இருந்து லாரியில் அதிக அளவு மண்களை ஏற்றிக்கொண்டு கல்குவாரிக்கு மேலே லாரி வந்து கொண்டிருந்தது .அப்போது கல்குவாரியின் மேல் பகுதிக்கு வந்த லாரி நிலை தடுமாறி கல்குவாரியின் மேல்பகுதியில் இருந்து லாரி கல்குவாரிக்குள் 400 அடி ஆழத்தில் உள்ள பள்ளத்திற்குள் குப்புற விழுந்தது. லாரி டிரைவர் வேணுகோபால் மற்றும் அவருடன் சென்ற சுப்பிரமணி இருவருக்கும் தலை மற்றும் பல்வேறு பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டது. அதைப் பார்த்த அங்கு கல்குவாரியில் வேலை பார்த்தவர்கள் , அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடிவந்து பார்த்து ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு பலத்த காயம் அடைந்த இருவரையும்திருச்செங்கோடுஅரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள் கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த சுப்பிரமணி என்பவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர். பலத்த காயம்பட்ட லாரி டிரைவர் வேணுகோபாலுக்கு திருச்செங்கோடு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக கோவையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



## கெங்கவல்லியில் மாற்றுத்திறனாளிகள் போராட்டம்!

தம்மம்பட்டி,ஜன.8

கெங்கவல்லியில், மாற்றுத்திறனாளிகள் சங்கத்தினர்,

மத்திய அரசின் சட்ட நகலை கிழித்து எறியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின், கெங்கவல்லி வட்டக்குழு சார்பாக, மத்திய அரசின் சட்ட நகலை கிழித்து எறியும் போராட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்றது. மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டம் ஒழிப்பு, காந்தியின் பெயர் நீக்கம், நிதி குறைப்பு , வேலை நேரம் அதிகரிப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை சீரழித்த மத்திய அரசின் சட்ட நகலை கிழித்தெறியும் போராட்டம் அச் சங்கத்தின் வட்டத் தலைவர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட துணை தலைவர் கந்தன், மாவட்ட இணை செயலாளர் சின்னதுரை மற்றும் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.



## மீன் இறைச்சிகளை கொட்டுவதால் ஒகேனக்கல் செல்லும் வனப்பகுதி சாலையில் துர்நாற்றம்; வாகன ஓட்டிகள் அவதி!

தர்மபுரி ,ஜன.8

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த ஒகேனக்கல் மடம் சோதனை சாவடியில் இருந்து பென்னாகரம் செல்லக்கூடிய மனசாலை அமைந்துள்ளது சாலையில் மடம் சோதனைச் சாவடியில் இருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் சாலை ஓரத்தில் இரண்டு அட்டை பெட்டிகள் நிறைய கெட்டுப்போன மீன் இறைச்சிகள் நண்டு உள்ளிட்ட கெட்டுப்போன மீன், நண்டு இறைச்சிகளை சாலை ஓரங்களில் கொட்டி செல்வதால் அதனை வன விலங்குகள் உண்பதுடன் காற்று மாசு ஏற்படுகிறது என்னால் இப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுதுடன் அவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் முகம் சுளிக்கும் நிலையம் ஏற்பட்டுள்ளது.

எனவே வனப்பகுதி ஒட்டி உள்ள சாலைகளில் கெட்டுப்போன மீன் நண்டு இறைச்சிகளை கொட்டும் நபர்கள் மீது வனத்துறையினர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன உயிரின ஆர்வலர்கள் மற்றும் அவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் கோரிக்கை வைக்கின்றனர்.



தருமபுரி பைசுஹள்ளியில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மைய ஆங்கில துறை சார்பில் சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது.

## கிருஷ்ணகிரி – பனகமுட்லுக்கு புதிய அரசு பேருந்து இயக்கம் – பொதுமக்கள் மகிழ்ச்சி!

கிருஷ்ணகிரி, ஜன.8

கிருஷ்ணகிரி முதல் பனகமுட்லு வரை காவேரிப்பட்டினம் ஜெகதாப் வழியாக, பழைய பேருந்துக்கு மாற்றாக புதிய அரசு பேருந்து இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த புதிய பேருந்து சேவை தொடங்கியதையொட்டி ஜெகதாப் பகுதி பொதுமக்கள் சிறப்பு பூஜை செய்து பேருந்தை வரவேற்றனர்.



இந்நிகழ்ச்சியில் ஊர் கவுண்டர் காமராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கன்னியம்மாள் ராமமூர்த்தி, கோவிந்தராஜ், வார்டு உறுப்பினர் சென்னப்பன், பூசாரி சென்னப்பன், நாட்டாண்மை கவுண்டர் துரைசாமி, மந்திர கவுண்டர் கணேசன்,ஓரிகை கவுண்டர்கள், பள்ளி மாணவ, மாணவிகள், ஊர் பொதுமக்கள் உட்பட பலர் புதிய பேருந்துக்கு பூஜை செய்து வரவேற்றனர்.

நீண்ட நாட்களாக பழைய பேருந்து இயக்கம் காரணமாக பயணிகள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வந்த நிலையில், புதிய அரசு பேருந்து இயக்கம் தொடங்கப்பட்டதற்கு பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். குறிப்பாக மாணவர்கள், அரசு மற்றும் தனியார் பணியாளர்கள், விவசாயிகள் உள்ளிட்டோர் இந்த பேருந்து சேவையால் பெரிதும் பயனடைவார்கள் என தெரிவித்தனர்.

புதிய பேருந்து இயக்கம் மூலம் பயண பாதுகாப்பு, நேர்த்தியான சேவை மற்றும் வசதியான பயணம் கிடைக்கும் என பொதுமக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து இந்த வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

## வாணியம்பாடி அருகே மூதாட்டி கழுத்தை நெரித்து கொலை செய்த மர்ம நபர்கள்! 4 சவரன் தங்க நகைகளை கொள்ளையடித்து தப்பி ஓட்டம்!!

வாணியம்பாடி, ஜன.8

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த பெத்தகல்லுபள்ளி பகுதியை சேர்ந்தவர் நடராஜன் மனைவி பவுனம்மாள் (65). இவர் புத்துக்கோயில் சுங்கச்சாவடி அருகே உள்ள ஏரிக்கரையோரமாக கொட்டகை அமைத்து மாடுகளை மேய்த்து கொண்டு அங்கேயே நீண்ட நாட்களாக சட்ட விரோதமாக மது பாட்டில்கள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாக கூறப்படுகிறது.



இந்த நிலையில் நேற்று இரவு புத்துக்கோயில் ஏரிக்கரை பகுதியில் மது பாட்டில்கள் விற்பனையில் ஈடுபட்டிருந்த பவுனம்மாள் என்பவரை மர்ம நபர்கள் கழுத்தை நெரித்து, கல்லால் அடித்து கொடூரமாக கொலை செய்து பின்னர் அவர் அணிந்து இருந்த 4 சவரன் தங்க நகைகளை பறித்துக் கொண்டு தம்பியோடியுள்ளனர். தகவல் அறிந்த சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சியாமளா தேவி மற்றும் அம்பலூர் காவல்துறையினர் பிரேதத்தை கைபற்றி பிரேத பரிசோதனைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து மூதாட்டியை கொலை செய்துவிட்டு நகைகளைபறித்துச்சென்ற மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில், வெனிசுலா அதிபர் அமெரிக்காவால் கைது செய்யப்பட்டதை கண்டித்து நகர செயலாளர் கணேஷ்குமார் தலைமையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## சார்ஜர் போட்டபோது எலக்ட்ரிக் பைக் தீப்பிடித்து எரிந்தது!

பல்லடம்,ஜன.8–

திருப்பூர் மாவட்டம் பல்லடம் மங்கலம் சாலையில் பொங்கலூர் பகுதியை சேர்ந்த பிரகாஷ் என்பவர் காய்கறி கடை நடத்தி வருகிறார். இந்த நிலையில் பிரகாஷ் அவருக்கு சொந்தமான பேட்டரி வாகனத்தை அவரின் கடைக்கு அருகே சார்ஜரை பொருத்திவிட்டு சென்று விட்டதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் திடீரென அந்த வாகனத்திலிருந்து புகையானது வெளியேறியதை கண்ட பிரகாஷ் பல்லடம் தீயணைப்பு துறையினருக்கு தகவல் அளித்துள்ளார். தொடர்ந்து சம்பவ இடம் விரைந்து வந்த பல்லடம் தீயணைப்புத் துறையினர் தண்ணீரை பீச்சி அடித்துதீயை அணைக்க முயன்றனர். இருப்பினும் தீ மளமளவென பிடித்ததால் அந்த இருசக்கர பேட்டரி வாகனம் தீயில் முற்றிலுமாக எரிந்து சேதம் ஆகியது.